**ஹல்தும்முல்ல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 22 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஹல்தும்முல்ல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கெ்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஒப்பந்த கடன்கொடுநர் தொகை ரூபா 7,217,137 ஆக இருந்தபோதும் அதனை ரூபா 9,969,704 பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 119,790,105 பெறுமதியான தொகை 5 கணக்கு விடயங்களுக்கு உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய பதிவேடு, மதிப்பீட்டறிக்கை மற்றும் விரிவான இணைப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ள கணக்கு மீதிகள் உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இவ்வருடத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இலக்கம் 15 பிரதேச சபைச் சட்டம் 149 ஆம் பந்தி | சபையின் எல்லைக்குள் உள்ள 3 கொட்டல்களிற்கு 2018 ஆம் ஆண்டில் இருந்து 1 வீதம் ஆதனவரித் தொகை கணிப்பீடு செய்து அறவிடப்பட்டிருக்கவில்லை. மற்றும் 2018 ஆண்டிற்கு சொந்தமாக ஒரு விடுதிக்காக ரூபா 417,910 நிலுவை ஆதனவரி கிடைக்க வேண்டியுள்ளது. | சட்டத்தின் அதிகாரப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டுக்கான நிலுவை ஆதனவரி எதிர்வரும் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்குவிதி | | | |
| | 114 ஆம் ஒழுங்குவிதி | சபையினால் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 700,140 பெறுமதியான முற்பணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதி, நிர்வாக ஒழுங்கு விதிப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 4.6 | பதவியில் இருந்து விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 26,920 பெறுமதியான கடன்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன்தொகையை அறவிட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 2 எண்ணிக்கையான காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 296,414 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதிப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சபை நிதிக்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 180/46 சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தபோதிலும் சபைக்கு சொந்தமான 24 கடைகளுக்கு கூறப்பட்டபடி மதிப்பீடு செய்யப்படாது 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | சுற்றுநிருப அறிவுறுத்தல்ப் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் மதிப்பிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,454,292 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,052,835 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,999,147 | 2,063,228 | 2,105,991 | 893,155 | 2,421,076 | 2,108,608 | 2,003,313 | 417,763 |
| (ii) | வாடகைகள் | 2,655,116 | 869,800 | 1,506,855 | 1,148,261 | 1,738,200 | 804,560 | 2,275,543 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 666,200 | - | 682,810 | - | 560,100 | - | 693,030 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,823,268 | 41,861,452 | 41,861,452 | 3,961,816 | 4,241,440 | 42,082,908 | 42,082,908 | 328,531 |
| | மொத்தம் | 52,143,731 | 44,794,480 | 46,157,108 | 6,003,232 | 8,960,816 | 44,996,076 | 47,054,794 | 746,294 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேலாக காணப்பட்ட 02 கிடைக்க வேண்டிய அரசிறை கடனாளிகள் ரூபா 26,438,600 பெறுமதியானவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடப்படாத வருமானங்கள் சம்மந்தமாக சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,305,297 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 8,611,484 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 878,030 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 500,000 அறவிடப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | பிரதேச சபைக்கு சரியான இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடத்திற்கு அதிகமான காலத்திற்கு காணப்பட்ட செலுத்த வேண்டிய செலவின கடன்கொடுநர் ரூபா 2,412,614 மற்றும் ஒப்பந்த கடன்கொடுநர் ரூபா 9,969,704 தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய நிலுவை தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 02 அலுவலர்கள் அதிகமாகவும் 05 பதவிகளுக்கு சொந்தமான 08 அலுவலர்கள் குறைவாகவும் உள்ளன. | மேலதிகமான அலுவலர்கள் முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் மற்றும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | உள்ளுராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 01 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சரியான முறையில் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |